# ஜோதிடர் திறன் மேம்பாட்டு தகுதிகள்

ஜோதிடர் அடிப்படையில் சில தகுதிகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் அப்படி செயல்படும் போது அவரின் திறன் மேம்படும்.

1 தினம்தோறும் அதிகாலை எழுந்தவுடன் இன்றைய கோச்சார கிரக நிலைகள் முழுவதும் அறிந்து கொள்ள வேண்டும்.

2 கோச்சார நிலைகளை பார்க்கும் பொழுது ஜோதிடரின் பிறப்பு கிரக நிலையோடு அன்றைய கோச்சார ஒப்பீடுகளையும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

3 உலகப் பொது விஷயங்களுக்கும் அன்றைய கோச்சாரத்தை ஒப்பீடு செய்து பார்த்துக் கொள்ள வேண்டும். தினந்தோறும் அப்படி பார்த்துக் கொண்டு வரும் பொழுது உலகியல் ஜோதிடம் உங்களுக்கு ஒரு நாள் வசமாகும்.

4 நேற்றைய நாளில் நமக்கேற்பட்ட ஜோதிட ரீதியான அனுபவங்கள் சிறிது நேரம் அசை போட்டு இன்றைய நாளுக்கு அது எப்படி பயன்படுத்த வேண்டும் என்று ஒரு சிறிது சிந்திக்க வேண்டும்.

5 நம் கோச்சார நிலைகளை (நமது பிறப்பு ஜாதகத்தின் மீது இன்றைய கோச்சாரம் ஏற்படுத்தும் விளைவுகளின் அடிப்படையில்)வைத்துக்கொண்டு இன்று நம்மிடம் ஜாதகம் பார்க்க வருபவர்களின் ஓரளவு தோராயமான தகுதி நிலைகளை கணிக்க பழகிக்கொள்ள வேண்டும்.

6 பலன் கேட்க வருபவர்கள் பணம் கொடுக்கிறார்கள் என்பதற்காக அவர்களை புகழ்ந்து பேசுவதோ மிகைப்படுத்தி ஜாதகம் பார்ப்பதோ ஒரு காலத்தில் அது உங்களுக்கு தீமையாக முடிந்து விடும்.

7 ஒருவரின் ஜாதகத்தில் தீய பலன்கள் நடக்கப் போகிறது என்று தெரிந்து விட்டால் அதை வாடிக்கையாளரிடம் கூறும் பொழுது நடக்கப் போகும்

சம்பவத்தையும் கூறிவிட வேண்டும் அதே சமயத்தில் பீதி ஏற்படுத்துவது போன்ற சொல்லக்கூடாது. அனுபவத்தில் சில வார்த்தைகளை பயன்படுத்தி அவர்களுக்கு பலன்கள் கூறி பழகிக் கொள்ள வேண்டும்.

8 ஒரு பொழுதும் இறை நம்பிக்கையும் கலாச்சார பண்பாடுகளையும் பாலாக்குவது போன்ற பலன்கள் சொல்லக்கூடாது. இறை நம்பிக்கையும் கலாச்சார பண்பாடுகளும் மனிதன் ஒழுங்குமுறை வாழ்வதற்கான யுக்தி என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

9. ஜாதகம் பார்க்க வருபவரின் ஜாதகங்களை தினந்தோறும் குறிப்புகள் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும் அதை வாரம் ஒரு முறை அல்லது மாதம் ஒரு முறை நாம் ஏற்கனவே பார்த்த ஜாதகங்களை சீராய்வு செய்து பார்க்க வேண்டும் தவறுகள் இருந்தால் திருத்திக் கொள்வதற்கும் புதிய விதிகளை கற்றுக் கொள்வதற்கும் இந்த யுக்தி பயன்படும்.

10. வாடிக்கையாளர்கள் நம்மை குழப்பத்திற்குள்ளும் அவரின் தேவைக்காக நம்மிடம் வார்த்தைகள் வாங்க முயற்சிப்பார்கள் நம் நிலையில் மிக உறுதியாக இருந்து விட வேண்டும். உதாரணத்திற்கு அவருக்கு விரயம் ஏற்படும் காலம் என்பதை நாம் கூறும் பொழுது அவர் திரும்ப எனக்கு பிரச்சனை வராது அல்ல என்று திரும்பத் திரும்ப நம்மிடம் பேசி ஒன்றும் நடக்காது பயப்பட வேண்டாம் என்று சொல்லும் நிலைக்கு நம்மை கொண்டு வந்து நிறுத்துவார்கள் அந்த இடத்தில் மிக கவனமாக அவரிடம் கையாள வேண்டும்.

11 ஜோதிடத்தில் பார்க்க முடியாத சில அப்பாற்பட்ட விஷயங்களுக்கு பிரசன்னங்களை பயன்படுத்தி ஜோதிடரின் தகுதியை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.

12 ஜோதிடர் வெறுமனே ஜோதிட புத்தகங்களை மட்டும் படிக்காமல்

மற்ற சில துறைகள் சார்ந்த புத்தகங்களும் படிக்க வேண்டும் உதாரணத்திற்கு தத்துவம் மருத்துவம் மதம் சமுதாயங்களை பற்றியும் தெரிந்து வைத்திருந்தால் ஜோதிடரும் கேட்கப்படும் கேள்விகளுக்கு சரியான விடைகளை தர முடியும்.

13 ஜோதிடர் பார்க்கும் ஜாதகம் சரியாக கணிக்கப்பட்டுள்ளது என்பதை உங்களுக்கு இருக்கும் மென்பொருளை அடிப்படையாக வைத்து உறுதியாக சரி செய்து கொள்ள வேண்டும். சில கிரக நிலைகள் அல்லது தசா புத்திகள் இன்னும் பல விஷயங்கள் எவ்வளவு தூரம் துல்லியத் தன்மை வாய்ந்தது என்பதை நாம் சிந்தித்து அதை சீர்தூக்கி தான் பலன் பார்க்கும் பொழுது பார்க்க வேண்டும்.

14. ஜோதிட பலன்கள் சொல்லும் பொழுது வாடிக்கையாளர்கள் மற்ற ஜோதிடர்களை பற்றி கூறும்பொழுது அதை கடந்து செல்ல வேண்டும் நான் தான் சிறந்த ஜோதிடன் அவன் பொய்யன் அவன் பெரிய ஆள் இல்லை என்று வரும் வாடிக்கையாளரிடம் பகிர்ந்து கொள்வது உங்களின் தகுதியை குறைத்து விடும். என்னிடம் ஜாதகம் பார்க்கும் பொழுது நான் கூறும் கருத்தை மட்டுமே எடுத்துக் கொள்ளுங்கள் மற்றவை உங்கள் விருப்பம் என்று தவிர்த்து விடுங்கள்.

15 பொருத்தம் பார்க்கும் பொழுது நீங்கள் யாருக்கு மணமகன் வீட்டிற்கு பார்க்கப் போகிறீர்களா அல்லது மணமகள் வீட்டுக்காக பார்க்கப் போகிறீர்களா என்பதை தீர்மானித்து விட்டு அவர்களுக்கு திருமணத்திற்கான காலங்கள் இப்பொழுது சரியா என்பதை பார்த்து தான் தீர்மானிக்க வேண்டும். பெரும்பாலான நேரங்களில் சரியான திருமண காலம் நேரங்கள் இருக்கும் பொழுது அவர்களுக்கு வரும் வர ன் அவர்களை எதிர்காலத்தில் நிம்மதி உரச் செய்கிறது. சில நேரங்களில் அவர்களுக்கு திருமண காலங்கள் இல்லாத பொழுது அல்லது பாதிப்பான தசா புத்திகள் கோச்சாரம் உள்ள காலத்தில் திருமண பொருத்தம் பார்க்கும் பொழுது அவர்கள் எதிர்காலத்தில் திருமண பாதிப்பை உருவாக்கும் ஜாதகங்களே அவர்களிடம் வந்தடைகிறது ஆகவே பொருத்தம் பார்க்கும் பொழுது அவர்களுக்கான காலம் இப்பொழுது சரிதான என்பதை தீர்மானித்து விட்டு தான் நீங்கள் பொருத்தம் பார்க்கவே செல்ல வேண்டும்.

16 நம்மிடம் ஜாதகம் பார்க்க வரும் வாடிக்கையாளர்கள் வேறு யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாத பல்வேறு ரகசியங்களை உங்களிடம் கூறி அதற்கு சில விடை தேடி கொள்வார்கள். அந்த ரகசியங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ளக் கூடாது இது நீங்கள் செய்யும் தொழிலுக்கு தர்ம நிலையாகும்.

17 நம்மிடம் ஜாதகம் பார்க்கும் வரும் வாடிக்கையாளர் அவரது உறவினரும் நம்மிடம் ஜாதகம் பார்ப்பார் அப்பொழுது அவருக்கு சம்பந்தமில்லாமலும்

நம்மிடம் அவரைப் பற்றி கேள்வி கேட்பார் அப்படிப்பட்ட தருணங்களில் ஐயா உங்களின் ஜாதகத்தை அவரிடம் கூற மாட்டேன் அவரின் ஜாதகத்தை உங்களிடம் கூற மாட்டேன் இது என் தொழில் தர்மம் என்பதை அவருக்கு புரிய வைத்துவிட வேண்டும்.

18 உங்கள் உறவினருக்கு ஜோதிட பலன்கள் கூறுவதை தவிர்த்து விடுங்கள் ஏனென்றால் சந்தோஷமான பலன்கள் நடக்கும் பொழுது உங்களை உயர்த்தி உங்கள் சுற்றத்தார் பேசுவார்கள் தீமையான பலன் நடக்கும் பொழுது நீங்கள் அவரோடு சுற்றத்தாராக இருப்பதால் அந்த இடத்தில் மிக கடினமான சூழல்களை சந்திக்க நேரிடும் ஆகவே சுற்றத்தாறுகள் வேறு ஜோதிடர்களிடம் ஜோதிட பலன்கள் பார்க்க அனுப்பி விடுவது உங்களை  சுற்றுச்சூழல் நிம்மதியாக இருக்க வழிவகுக்கும்.

19 முடிந்தவரை வாடிக்கையாளர்களை நேரடியாக அமர்ந்து கண் மட்டும் உடல் மொழியோடு ஜோதிடம் பார்ப்பதே உங்களை சரியான ஜோதிட பலன்கள் கூறுவதற்கு வழிவகுக்கும்.

20 உங்கள் வாடிக்கையாளருக்கு ஜோதிட விதிகள் மற்றும் என்ன முறையில் ஜோதிடம் பார்க்கிறோம் என்பது தெரியாது அவற்றையெல்லாம் சொல்லி குழப்பாமல் நேரடியாக அவருக்கு நடக்கப் போகும் பலன்களை கூறி வர வேண்டும்.

21 ஒவ்வொரு ஜோதிடருக்கும் ஒரு குறிப்பிட்ட துறையில் அதிக சிறப்பு வாய்ந்த நிலை இருக்கும் உதாரணத்திற்கு திருமணம் பற்றிய விஷயங்கள் அவருக்கு மிக நன்றாக ஒத்துவரும் இன்னும் சிலருக்கு அரசியல்வாதிகள் ஜாதகம் பார்ப்பது ஒத்து வரும் இது அவரின் ஜாதகத்தில் இருக்கும் கொடுப்பனையை பொறுத்து இருக்கும். சில கொடுப்பினைகள் உங்களுக்கு சரியாக இருக்காது அதை தெரிந்து கொண்டு அந்தத் துறையில் அதிகமாக எடுத்துக் கொள்ளாமல் வேறு நபரிடம்  பார்க்கச் சொல்லிவிட வேண்டும். மருத்துவர் எப்படி தனித்தனி பிரிவு மருத்துவர் இருப்பாரோ அதுபோல ஜோதிடரும் தனக்கு சிறந்த பாவம் கிரகம் எது என்று புரிந்து கொண்டு அந்த துறையில் உள்ள வாடிக்கையாளரை மட்டும் சரியாக கையாண்டால் வெற்றி உறுதியாக இருக்கும்.

22 உங்களின் கோச்சார சந்திரன் தீய கிரக தொடர்புகள் இருக்கும் பட்சத்தில் அன்றைய நாளில் ஜோதிடம் பார்ப்பதை தவிர்த்து விடுவது நன்று உங்களுக்கு ஏற்படும் தோல்விகள் அன்றைய நாளின் விதைகளாக இருக்கும்.

23 சில கிரக சேர்க்கைகள் கோச்சாரத்தில் ஏற்படுவது உங்களின் ஜாதகத்திற்கு அது தீமையை தரும் அந்த கிரக சேர்க்கைகளை கவனித்து அந்த வாரம் அல்லது அந்த மாதம் அந்த குறிப்பிட்ட காலங்கள் எதை செய்ய வேண்டும் எதை செய்யக்கூடாது என்பது ஜோதிடர் தீர்மானித்தால் மட்டுமே பல தோல்விகளை தவிர்க்க வாய்ப்பை தரும்.

24 ஆரம்ப நிலையில் இருக்கும் ஜோதிடருக்கு பல சவாலான விஷயங்கள் இருக்கும் உங்களை தகுதியான ஜோதிடர் தான் என்பதற்காக அவர்கள் சோதிக்கச் செய்வார்கள். சோதனையில் வெற்றி பெற திடமான நம்பிக்கையோடு விதிகளை கையாண்டு வந்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்.

25 உங்கள் வருவாயில் ஜோதிட ஆய்வுக்கென்று ஒரு 5% சதவீதமாவது பயன்படுத்துங்கள் அந்த 5% சதவீதத்தை ஜோதிடம் மற்றும் மற்ற புத்தகங்களை வாங்கி படிப்பதற்காகவும் சில ஜோதிடர்களிடம் நேரடியாக கலந்துரையாடுவதற்கான பயணங்களுக்காகவும் சில வகுப்புகளில் கலந்துகொண்டு அறிவை மேம்படுத்திக் கொள்ள நிச்சயம் அந்த 5% சதவீதம் பொருளாதாரம் உதவும்.

ஜோதிட திறன் மேம்பாட்டுக்கான 100 விதிகள் உருவாக்கியுள்ளேன் உங்களுக்கு 25 விதிகள் மட்டுமே கொடுத்துள்ளேன் அடுத்தடுத்து பார்ப்போம்.

**Selvam astrologer Coimbatore**

**Gemini school of astrology**

**Call WhatsApp number 9842780218**